ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

பரமார்த்த தசையில் பாவிக்கவேண்டியதை வியவஹாரதசையில் இருப்பதாகவோ, இருக்கவேண்டியதாகவோ, நினைப்பது விபரீதமாகும். பரமார்த்தத்தில் பெருந்தன்மையுள்ளவனும்நாடகசாலையில்பிச்சைக்காரன் வேஷம்தரித்து அதற்குறிய வியவஹாரம்செய்துவரும் நட்டுவன் அந்த அவஸ்தையில் அதற்கு மாறுதலாகத் தன்னையொரு பெரியமனிதனென்று வியவகரித்துக்கொள்வது விபரீதமல்லவா? ஆகவே பரமார்த்ததசையில் உள்ளபடி வியவஹாரதசையிலிருப்பது சரியாகாது. பரமார்த்தத்தில் ஸ்திரீயாயில்லாதவன் டிராமாவில் ஸ்திரீவேஷம்போட்டு நடனம்செய்து வருகையில் அந்த அவஸ்தையில் தான் உண்மைஸ்திரீயாயிருக்கவேண்டியதாக நினைப்பது சரியாகாதல்லவா? அதுபோல் வியவஹாரதசையில் அவரவர்களுடைய பூர்வஜன்ம கர்மானுஸாரமாக ஒவ்வொரு அவயவங்களிலும் ரேகை முதற்கொண்டு பற்பலபேதமுடையதாய் சிருஷ்டிக்கப்பட்டும் வேறுபடுத்தியே வியவஹரிக்கப்பட்டும் வரும் சரீரபேதங்களையெல்லாம் சமமாயிருப்பதாகவோ, அல்லது அப்படி இருக்கவேண்டியதாகவோ நினைப்பது பிராந்தியேயாகும். வஸ்து எப்படியிருக்கின்றதோ அப்படியே அறிவதுதான் நல்லறிவாகும். மாறியறிவது பிராந்தியாமென்றல்லவா ஸித்தாந்தம். ஞானாதிகுணங்களாலும், சண் காது கை கால்முதலிய அகக்கருவிகளாலும் பெண்டீர் பிள்ளை வீடு வாசல் முதலியபுறக்கருவிகளாலும் எவ்விதத்திலும் ஸமமாயில்லாதவர்களை ஸமத்துவமுடையவர்களாகக் கருதுவது பிராந்தியென்பதிற்றடையில்லை. அப்படி பிராந்தியாலாவது ஸமத்துவம் பாராட்ட விரும்புகின்றவர் எல்லோரையுமே ஸமப்படுத்திப் பார்த்தால் நன்றாயிருக்கும். வைதிகப்பேச்சு பேசும்வகுப்பாரே ஒழியவேணுமென்று சிலரும், ஹிந்துமதமென்ற பேச்சையெடுப்பவரடியோடு ஒழியவேணுமென்று சிலருமாக ஸமத்துவத்தில் நோக்கமுள்ளவர்களே நினைப்பதோடும் சொல்லுவதோடும் மாத்திரமாயில்லாமல் பத்திரிகைகளிலும் பிரசுரித்துவிடுகிறார்கள். இவர்களது ஸாம்யநிலையைப் பொதுநலம் நாடுவோரே நினைத்துப்பார்க்கவேணும். அன்றியும் மதப்பேச்சே ஒழிந்தாலல்லது ஸமத்துவநிலைவராதென்றும. க்ஷேமம்கிடைக்காதென்றும் இவர்களதுகொள்கை. ஸகல மதப்பேச்சுமேஒழியவேணுமென்கிறார்களா? அப்படியானால் அது ஸாத்தியமில்லாதகாரியம். கிரிஸ்தவர்களும் மகம்மதியர்களும் மதப்பேச்சை மறக்க சம்மதிப்பார்களா? ஹிந்துமதம்மாத்திரம் அழியவேண்டுமென்பார்களானால் ஹிந்துமதமென்ன அபராதம்செய்ததோ தெரியவில்லை. ஒரு பெருங் கூட்டத்தாரே அடியோடு அழிந்துவிட ஆசைப்படுவது ஸமத்துவம்பாராட்ட நினைத்தவர்களுக்கழகில்லை. ஸமத்துவமென்ற வார்த்தையைமாத்திரம் சொல்லிக்கொண்டு விஷமப்பிரசாரத்தை வெளிப்படையாகச் செய்பவர்களை உண்மை பேசுபவர்களாக நினைத்து நம்புவதெப்படியென்று ஆர்யச் சிறுவர்கள் நினைக்கின்றார்கள். ஆகையால் உள்ளொன்று வெளியொன்றாகப் பேசுகின்றவர் போகும் வழியிற் செல்லாமல் சாஸ்திரஸம்மதமான சித்தாந்தவழியே நடந்து எல்லோரும்சிரேயஸ்ஸை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

103 *

# ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ ஐப்பசி௴ சூஉ

## வியவஹார தசையில் ஸர்வமும் ஸமமாகுமா?

பரமேசுவரனால் படைக்கப்பட்டப் பிரபஞ்சத்தில் எல்லா வஸ்துக்களும் ஸமங்களாக இருக்கின்றனவா? அல்லது ஸமங்களாக்க முடியுமா? என்று ஆராய்ச்சி செய்தால் ஜடவஸ்துக்களாயினும், சேதனவஸ்துக்களாயினும், ஸர்வமும் ஸமமாயிருப்பதாக பிரத்தியக்ஷத்தில் புலப்படவில்லை. உதாரணமாக ஜடவஸ்துக்களில் ஓஷதிவர்க்கங்களில் ஒவ்வொன்றும், ரஸம் வீர்யம் விபாகம், பிரபாவம் இவைகளால் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. மதுரரஸமுள்ளவஸ்துக்களெல்லாமும் ஸமமாயில்லை. சேலஞ்சர்க்கரை-ஜீனிசர்க்கரை-நவாத்சர்க்கரை இவை பொதுவாக சர்க்கரைஜாதியிற்சேர்த்து சர்க்கரையென்றே வியவஹரிக்கப்பட்டுவந்தாலும், அவற்றுள் அவாந்தரஜாதிபேதமும், அதற்குரிய ரஸவீர்யாதிகளும் வெவ்வேறுபட்டிருப்பதாகத்தான் வைத்திய நூல்களில் வர்ணிக்கப்படுகின்றன. கரும்புவர்க்கத்தில் காணப்படும் ஜாதிபேதங்களும், அவைகளில் மதுரரஸத்தின் தாரதம்மியங்களும் அவை ஸமங்களில்லை யென்னுமுணர்ச்சியைத்திடப்படுத்துகின்றன. இதுபோலவே புளிப்பு கசப்பு முதலிய ரஸமுள்ள வஸ்துக்களும் ஸமங்களாயில்லை. எலுமிச்சையில் பல் ஜாதிபேதமும், அததிலும் குணதிபேதமுமிருக்கிறதேயன்றி ஸமமாயில்லை. கரும்பு எலுமிச்சை என்பதாதியாக ஒரேசப்தத்தால் வழங்கப்படினும், கிளை இலை முதலியவைகளில் ஒரேமாதிரியுள்ள உருவங்கொண்டிருப்பினும் ஒரே ஜாதியுடையதாகக் கருதப்படினும், அவாந்தர ஜாதிபேதமும் ஆந்தரமான குணபேதமிருப்பதுபற்றி ஸமமாக நினைக்கப்படவில்லை. இதுபோலவே விருக்ஷாதிகளிலும் ஸாம்யமில்லை. பசு பக்ஷிமுதலிய சேதனவர்க்கங்களிலும் ஒரே ஜாதியுடையனவாயினும் ஸாம்யம் காணப்படவில்லை. கூறப்படவுமில்லை. மான் ஜாதியில் அங்கா

வயங்கள் வெளிப்படையாக ஒரேமாதிரி காணப்படினும் அவாந் தரமான எவ்வளவோ ஜாதிபேதங்களும், மாம்ஸாதிகளில் குண பேதங்களும் வைத்திய நூல்களில் கூறப்படுகின்றனவேயன்றி ஸாம்மியம் கூறப்படவில்லை. இவைகளை ஸமப்படுத்த ஒருவன் ஆசைப்பட்டு பெருமுயற்சி செய்தாலும் முடியாத கார்யமே யாகும். ஈசுவரசிருஷ்டியில்லமைக்கப்பட்ட வேற்றுமையை மாற்றி ஸமப்படுத்த எவர்தான் சக்தியுள்ளவராவார். இவைபோலவே மனிதர்வகுப்பிலும், மனுஷ்யத்தன்மை, யென்னும் வியாகப ஜாதி பொதுவா யெல்லா மனிதர்களிடமிருப்பினும் அதனுள் அவாந்தர ஜாதிபேதமும், அதற்குரிய குண கர்மாதிபேதமும் சாஸ்திரங் களில் வகுக்கப்பட்டபடி பிரத்தியக்ஷத்திலும் காணப்படுவது பற்றி எல்லாமனிதர்களும் ஸாம்மிய முடையவர்களாயில்லை. எல் லோரையும் ஸமத்துவமுடையவர்களாகச் செய்துவிடக்கருது வதும்ஈசுவரசங்கற்பத்திற்கு விபரீதமாயுள்ளதுபற்றி முடியாதகார் யமாகும். எவ்வாறுஸமப்படுத்துவது? பார்ப்போம். ஞானத்தால் ஸமப்படுத்தமுடியுமா? அறிவீனர்களை அறிவுடையோராகச்செய்ய சக்தியுள்ளவனெவன்? இந்தக்கார்யம் முடியாதென்று பகவானே அபிப்பிராயப்படுகிறார். வேறு ஆந்தரமான குணங்களாலும் ஸமப்படுத்துவதும் அஸாத்தியம். குறைந்த அங்காவயங்களைக் கூட்டியும், கூடிய அங்காவயவங்களைக் குறைத்தும் ஸமப்படுத்த முடியுமா? அப்படியானால் கூன்-குருடு-செவிடு-நொண்டி-குட்டை நெட்டை-குரூபி இவ்விதமாக யாருமில்லாமல் எல்லோரும் ஒரே மன்மதவடிவம் பொருந்தியவர்களாகச் செய்யப்படலாமே, இதை வேண்டாமென்று தடுப்பவர்யார்? இதுஸாத்தியமாகக் கூடியதா? தனம்-தான்யம்-சந்தானம்-சம்பத்து இவைகளாலாவது எல்லா மனிதர்களையும் ஸமப்படுத்துவது ஸாத்தியமா? அப்படியாயின் எல்லோரும் தனதான்யம் நிறைந்தவர்களாகவும் இஷ்டப் பட்டபடி ஸந்தான ஸம்பத்துள்ளவர்களாகவும், ஆக்கப்படலாமே. அதனை மறுப்பவரெவர் இதுதான்முடியுமா?ஒருகாலும்முடியாது. அண்ணன் தம்பிகளாயுள்ளவர்களே குடும்பஸொத்தைச் சமமாக சரிவரப்பிரித்துக்கொண்டு சுகமாயிராமல் கொஞ்சம்குறைந்ததோ கூடித்தோ என்று வழக்கிட்டுத்திரிவதைத் தெரிந்துகொள்ளாத வருண்டோ? அப்படியிருக்கையில் ஸமத்துவம் கொண்டாடப் படவேண்டும், சமஉரிமையை உணரவேண்டு மென்பதாதியாகச்

சிலர் சிறுவர்களுக்கு ஹிதோபதேசம் செய்கிறார்களாமே அது ஸாத்தியமென்று எப்படி கருதப்படுகிறதோ தெரியவில்லை. இந்த நிலைமையில் ஸஹோதரத்தன்மையும் பாவிக்கப்படவேண்டுமாம். உடன்பிறந்த ஸஹோதரனே திண்டாடுகையில் இதென்னவிந்தை! பாருங்கள்!! இப்படித்தன் புத்தியையே ஸ்வாதீனத்திலமைத்துக் கொள்ள முடியாமலிருக்கையில்ஸர்வஸ்வாதந்திரியமும் கிடைத்து விடவேண்டுமாம். இதென்ன துராலோசனை. இந்தமாதிரி அஸாத்தியகார்யங்களில் மனதைச்செலுத்தாமல் வேதவாயிலாக ஈசுவரன்காட்டிய வழியிலேயேநின்று யாவரும் சுகப்படுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்

---

# விவாஹத்தில் விசேஷம்.

794-வது பக்கத்தொடர்ச்சி.

இங்குவேறு ஒரு சிறியவிஷயம் தோன்றுவதால் அதையும் தோன்றியவரைச் சொல்வாம். பற்பலதீவினைகளால் உண்டாகும் அனேக ரோகங்களை ஒழிக்கவேண்டிய வனேக சத்கருமங்களான பிராயச்சித்தங்களாகவே கர்மவிபாகம் ஏற்பட்டது. அனேக ரோகங்களை நிவர்த்திசெய்து சுகம்கொடுக்கும்சாஸ்திரமே அதுவாம். எங்ஙனமெனில் உலகத்தில் ஒவ்வொரு காரியத்துக்கும் காரணம் உண்டென்பது திண்ணம். அதுவன்றி வேறு வழியில்காரியம் உண்டாவதில்லை. அவ்விதம் எல்லாவற்றிற்குமிருக்க, ரோகங்களெந்தக்காரணத்தால் உண்டாகின்றனவென வாசங்கை நிகழ பெரியோர்கள் முற்பவத்திற்செய்த தீவினையே அவற்றிற்குக்காரணம் என்றார். அந்தந்த ரோகங்களுக்கேற்ற பாவங்கள் பலவிருப்பதால் அவற்றை நிவர்த்திசெய்துகொண்டால் ரோககாரணம் நசித்தால் ரோகங்களும் நசிக்கும் என்க. ஆகவே பிராயச்சித்தம் அனேக ரோகங்களை நிவர்த்திக்குமென்றேற்பட்டது. இங்ஙனமிருக்க அதிக வயதுள்ளவனிடம் கலந்த குற்றத்திற்காக பிராயச்சித்தம் விதிக்கப்பட்டமையின் அதுவும் ரோகஎதுவென ஏற்பட்டதல்லவா? ஆதலாற்றான் அதிக வயதுள்ளவள் விவாகத்திற்கு அயோக்யமாவாள் என்றேற்பட்டது.

அங்ஙனமே சரீரமும் புருடன் சரீரத்திலும் சிறியதாகவே இருக்க வேண்டியது. அங்ஙனமின்றேல் பார்வைக்கும் சுகத்துக்கும் விரோதமென்பது அனேகர் அறிவார். சகோதரர் உள்ள பெண்ணை விவாகம் செய்யவேண்டுமென்றது அவரவர் குல சொரூபம் தெரிந்து செய்யவேண்டுமென்ற கருத்தினால். மேல் ஒரு ரிஷியையும் ஒரே கோத்திரத்தையும் உடைய பெண் விவாகத்துக்குக் கூடாது' என்றுண்டு. அங்கு ரிஷி என்றது பிரவரரிஷிகளையே. 'ஒரே கோத்திரப் பிரவரங்களையுடைய பெண்ணைவிவாகம்செய்து அவளைச்சம்பந்தித்தாலும் அவளிடத் தில்சந்தானமும் உண்டாய்விட்டாலும் அவள் குடும்பம் பிராமண் யத்தையே விட்டொழிக்குமென்க' என்று சாதாதபர் ஆபஸ் தம்பர் முதலிய அனேகர் கூறியிருத்தலால் ஸகோத்திர ஸமானப் பிரவர விவாகம் அதிக நிந்திதமாம். இப்படியே ஈனத்தொழி லுள்ளதும் புருஷசந்ததியில்லாததும் வேதாத்யயனமில்லாததும் க்ஷயகுட்டாதி ரோகமுள்ளதும் ரிஷிசம்பிரதாயம் குறைந்ததும் அங்கக்குறைவுள்ளதும் அமாரத்வமுள்ளதும் மகாகாமிஸ்வபாவ முள்ளதும் வித்தையில்லாததும் போக்கிரித்தனமுள்ளதும் உண் ணக்கூடாததையுண்பதும்குடிக்கக்கூடாததைக் குடிப்பதும் துரா சாரங்கள் மலிந்ததுமானகுலங்களையும்குலதோஷமுள்ள குலங்களை யும் இருகையிலும்விவாகத்தில் தள்ளவேண்டும் இங்ஙனம்வதூவார் களுக்கு ஷஷ்டாஷ்டமாதி குற்றங்களையும் சோதிடவழியிற்சோதி த்துஅறிந்திடவேண்டும். அவ்வளவுசோதித்தாற்றான் பெண்ணைக் கொடுக்கலாம், அதிற்செய்யவேண்டியமுறைகளும் அந்தந்தசம்ஸ் காரத்தின் பெருமையும் அதிலுள்ள மந்திரங்களின் ரகசியமும் அவற்றின் பொருளும் அவ்வித விவாகப்பயனும் நம்மவர்க்கு மேற்றிசையாரைப்பார்க்கிலும் அனேகமடங்கு மேலானதாமாம்' இவற்றில் ஒரு சிறிய பாகத்தை எழுதத்தொடங்குவாம். பிராம விவாகத்தில் முக்கியமான வாக்தானவிதி நன்குகூறப்படுகின்றது' சோதிடமறிந்த பெரியோர்கள் நல்ல சுபதினத்தில் இரண்டு அல்லது நான்கு அல்லது, எட்டு பிராமணர்கள் நல்ல அலங்காரங் களுடன்வரனுடனாவது அவள் தகப்பனுடனாவது போகவேண்டும். அங்குள்ளமந்திரத்தின்பொருள், ஓ இந்திராதிவேர்காள்! நாங்கள் நடக்கும்வழி குற்றமற்றதாகுக நாங்கள் வரனால் அனுப்பப்பட்டு எவ்வழிநடந்து வதுவைக்கேட்கச்சென்றோமோ அவ்வழிநல்வழி

யாகுக. ஸூர்யாதிதேவர்கள்எங்களைநல்வழியில்நடத்தவேண்டும்; யாம் சேர்க்கப்புகும் இணை மிக நல்லதாகவும், உலகம் புகழும் படியாகவுமிருக்கவேண்டும். ஓ பெண்ணே! இந்தக்கன்னிமாட மென்னும் பாசம் உன்னிடமுண்டு; அதை இன்றுடன் ஒழித் திட்டாய்; இதுவே வருணபாசமெனப்படும். இங்கு ஒருவிசேட முண்டு:—வடநாடுகளில் சிறிய கன்னிகள் வருணபூஜை செய்வது வழக்கம். இனி இல்லறங்களைக் குறைவற அனுஷ்டிக்கவேண்டி உன்னை நல்ல புருடனுடன் சேர்ப்போம். இனி பிதிருகுல சம், பந்தத்தைவிட்டு பதிகுலத்தில் கட்டுவோம். அதினின்று மீண்டும் பிரிக்கமாட்டோம். (இதனால் கைம்பெண்களுக்கு மறுமணம் கூடாது கூடாது என்பது கிடைத்தது, ஒரு தடவை பிதிருகுலத் திருந்து பதிகுலஞ்சென்றவளுக்கு மீண்டும் அந்தகோத்திரத்தை யொழித்து மேல் வேறு கோத்திர சம்பந்தமுண்டாக்கவேண்டி யதற்கு மந்திரமின்மையால் என்க. இவ்விதம் அனேக இடர்கள் உள்ள விதவாவிவாகத்தை எவ்விதம் போலி சீர்திருத்தக்காரர்கள் கொண்டார்களோ அறிகிலேம். மேற்றிசையார் பாஷையைக்கற்று நன்றாகப்புத்தி தெளிந்த இவர்களுக்கு இதுமட்டில் மனதில் படாதிருப்பதற்குக் காரணம் யாதோ தெரிகிலேம். மேல் மந்திரார்த்தம் வெளியேயாதலாலதைவிட்டுவிட்டோம் இங்ஙனம் எல்லாத்தேவர்களையும் வேண்டிக்கொண்டே நாம் செய்யும் எத் தொழிலும் செய்யப்படுகின்றது.

சுப்ரமணியன்.

---

# ஸ்ரீ நடேசஸ்துதி.

(813ம் பக்கத்தொடர்ச்சி)

भक्त्या ये तव सन्निधावनुदिनं पश्यन्ति पादांबुजं
भक्ता भस्मविभूषिता भवभयं भेत्तुं भवन्तं गताः ।
तेषामीप्सितदायकोसि भगवन् भक्तोस्मि चाहं प्रभो
तस्मान्मां परिपालय त्वमधुना देहीश मद्वांछितम् ॥२६॥

விபூதியினால் அலங்கரிக்கப்பட்ட சரீரங்களையுடைய எந்த பக்தர்கள் சம்சார பயத்தை நாசஞ்செய்வதற்கு உம்முடைய சந்

நிதியில் உம்மைச் சரணாகதியடைந்து உம்முடைய சரணகமலத்தை தினந்தோறும் தர்சிக்கின்றார்களோ! அவர்களுடைய மனோரதத் தைப்பூர்த்தசெய்கின்றீர். ஓ! ப்ரபோ! நானும்பக்தனாகையால் என் னைக்காப்பாற்றும். என்னுடைய இஷ்டத்தைக்கொடும்? (26)

स्वामिन् यत्तव ताण्डवं मुनिवरः श्रीशौनकः पुण्यभाक्
दृष्ट्वा ऋग्भिरमन्दहर्षसहितः स्तुत्वा भवन्तं प्रभो ।
संप्रापाधिपतित्वमीश भवतः श्रीबह्वृचानां वरात्
शाखासूत्रनिबन्धकत्वमगमत्तन्मेऽद्य संदर्शय ॥२७॥

ஓ நாதனே! புண்யசாலியான ஸ்ரீசௌனக மஹர்ஷியானவர் எந்த உம்முடைய தாண்டவத்தைத் தர்சித்து பரமானந்தசகிதராய்க் கொண்டு வேதங்களால் உம்மை ஸ்துதிசெய்து உம்முடையகிரு பையால் ரிக்சாகிகளுக்கு நாயகனாயிருப்பதையும் ரிக்சாகாசூத்ர கர்த்தராயிருப்பதையும் அடைந்தாரோ அந்த தாண்டவத்தை இப்பொழுது எனக்குக் காண்பித்தருள்செய்யும். ஒருசமயம்பிருகு வம்சதிலகரான சௌனகமஹர்ஷியானவர் சிவபக்தசிரோமணி யான நந்திகேச்வரரை நமஸ்கரித்து பரமேசுவரன் பார்வதிதேவி யோடு உலகத்தின் உபகாரத்தின்பொருட்டு மூன்றுசந்திகளிலும் நர்த்தனஞ்செய்வதாக வேதசாஸ்திரங்களில் ப்ரசித்திபெற்றதே. அந்த நர்த்தனம் தேவலோகத்திலா பூமியிலா பர்வதத்திலா ஜலத்திலா வனத்திலா ச்மசானத்திலா சூர்யமண்டலத்திலா சந் திரபிம்பத்திலா என்றுவினவ நந்திகேச்வரர் மிகுந்த சந்தோஷத் துடன் பதில் கூறுவாராயினர். பரமசிவன் உமாதேவியார் ஒருவர் மட்டும் தர்சிக்கும்படி கைலாசத்தில் எப்பொழுதும் நர்த்தனம் செய்கின்றார். சிதம்பரத்தில் ஸ்ரீ சித்ஸபையில் எப்பொழுதும் எல்லோருங்காண ஆனந்த நர்த்தனம் செய்கின்றார். உனக்குத் தாண்டவ தர்சனத்தில் விருப்பமிருந்தால் சிதம்பரத்துக்குப் போகவேண்டும். அவ்விடத்தில் தாண்டவ தர்சனஞ்செய்து நேத்திரசாபல்யமடைவாயாக என்று. உடனேசௌனகமுனிவர் சிதம்பரம்வந்து சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து ஆனந்தத்தாண்ட வந்தர்சித்து வேதங்களால் ஸ்துதிசெய்து அவருடையவரத்தினால் ரிக்சாகிகளுக்கு அதிபராகி ரிக்சாகாசூத்ர கர்த்தாவாகவுமாகிவெகு காலம் சாஸ்திரவிசாரஞ்செய்துகொண்டிருந்தனரென்கிற இச்சரித் திரத்தை சிதம்பரமாகாத்மியம் 24-வது அத்யாயத்தில்காண்க(27)

शंभो यां करुणामवाप्य भगवन् क्लिष्टस्वरूपान्वितः
लेखेन्द्राख्यनृपात्मजोऽघशमने स्नात्वाथगंगांभसि ।
लब्ध्वा स्वर्णमयं शरीरममलं नृत्तं च वीक्ष्यादरात्
सम्मोदं समवाप शाश्वतमसावस्मिन् कृपां तां कुरु ॥२८॥

ஓசம்போ; ஓபகவன். குஷ்டசரீரத்துடன் கூடிய லேகேந்திர மகாராஜாவின்குமாரன்எந்தஉம்முடையகிருபையை அடைந்துபாப நிவர்த்தியின்பொருட்டு சிவகங்காதீர்த்தத்தில் ஸ்நாநம்செய்துநிர்மலமான ஸ்வர்ணமயமான சரீரத்தையடைந்து பக்தியோடு உம்முடைய திவ்ய தாண்டவத்தை தர்சித்து நித்யானந்த ஸ்வரூபமான மோக்ஷத்தை அடைந்தானோ அந்தகிருபையை இந்த என்னிடத்திலும் கொடுத்தருளும்.

## ஹிரண்யவர்ம சரித்ர சங்ரஹம்.

இமயமலைக்குத் தெற்கேஉள்ள கௌடதேசத்தில் ஐந்தாவது மனுவான லேகேந்த்ர மஹாராஜனுக்கு மூத்தாளிடத்தில் ஸிம்மம் போல் வெள்ளைநிறமுடைய சிம்மவர்மன் என்றும் ஒருகுமாரனும் இளையாளிடத்தில் வேதவர்மன் சுமதிவர்மன் என்றும் இரண்டு குமாரர்களும் பிறந்தார்கள். சிம்மவர்மன் சரீர ரோகத்தால் ராஜ்ய பரிபாலனத்துக்கு யோக்யமல்லாதவனென்றெண்ணி தந்தையாருக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டு காசி வங்கதேசம் சாவகதேசம் ஒஷ்ரதேசம் ஸ்ரீ சைலம் ஸ்ரீ காளஹஸ்தி முதலான க்ஷேத்ரந்தரிசித்து ,ஒரு வேடனுடைய சகாயத்தால் காஞ்சீ க்ஷேத்ரமடைந்து சிலகாலமவ்விடமிருந்து தரிசித்து பின்பு அவ்வேடன் வழிகாட்டச்சென்று தில்லைவனத்தை அடைந்து சிவகங்கைக்கரையிலே யோக நிஷ்டையிலிருக்கும் ஸ்ரீ வியாக்ரபாத முனிவர் முன்சென்று நமஸ்கரித்து நின்றான். முனிவர் யோகத்தினால் அரசனுடைய வரலாறனைத்தையும் தெரிந்து ஸ்ரீ நடேசப்பெருமான் கருணைசெய்தாராயின் சிதம்பராலயத்திருப்பணிக்கு இவன் ஆளாவான் என்றெண்ணி நாம் வரும்வரை இங்கேநில் என்று சிங்கவர்மனைக்கரையிலே 'நிறுத்திவிட்டு பதஞ்சலி முனிவருடன் கனகசபையின் வாயிலிலே நின்று நிருத்த தரிசன காலம்வர உள்ளே புகுந்து நமஸ்கரித்து கௌடேசகுமாரன்

இங்கேவந்து நிற்கின்றான் அவனுக்கு சரீரரோகத்தை நீக்கி தாண்டவத்தை தரிசிக்கச்செய்து அவனை அடிமை கொண்டருளுக என்று சிற்சபேசரிடம் விஜ்ஞாபித்தார் சபேசருடைய உத்திரவால் ஒரு பன்றிமுழுகி பொன்வடிவத்துடன் எழுந்ததைப் பார்த்து ஆச்சரியங்கொண்ட சிம்மவர்மனை சிவகங்கையில்ஸ்நாநஞ் செய்வித்து பொன்வடிவம் ஏற்பட்டதால் ஹிரண்யவர்மன்என்று நாமகரணஞ்செய்து பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து சபேசருடைய சந்நிதியில் அழைத்துவர நடேசரும் தாண்டவத்தைக் காட்டி இரண்யவர்மனே நீ நமக்கும் இம்முனிவர்களுக்கும் மூவாயிர முனிவர்களுக்கும் தொண்டுசெய்வாயாக என்றருள் செய்தார். பின்பு ஸ்ரீ மூலஸ்தானேச்வரரையும் திருப்புலீச்வரரையும் ஸ்ரீ அனந்தேச்வரரையும் தரிசிக்கச்செய்து தமது பர்ணசாலையை அடைந்து பத்நியினிடம் நீ உபமன்யுவுக்குப் பின்பு பெறாது பெற்ற பிள்ளை இப்பிள்ளை என்று முனிவர் சொல்ல பத்நியும் தமதுகுழந்தைபோல் பாவித்துவந்தாள். ஹிரண்யவர்மன் சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து நடேசரைத்தரிசித்து முனிவர்களுக்கு சுச்ரூஷை செய்துவரும்நாளில் கௌடேசராகிய மனு தமராஜ்யத்தை தம்முடைய மூத்தகுமாரனாகிய சிம்மவர்மனைக் கொண்டு நடத்திவிக்கும்பொருட்டு குலகுருவாகிய வசிஷ்டமுனிவருக்கு விண்ணப்பஞ்செய்து சுவர்க்கத்தை அடைந்தனர். வசிஷ்டமுனிவர் இளையகுமாரர்களைக்கொண்டு கிரியைகளனைத்தையும் நடத்திவைத்தபின் தில்லைவனத்துக்கு வந்து சிற்சபேசரை தரிசித்து வியாக்ரபாத பதஞ்சலிமுனிவர்களிடம் கௌடேசமனுவின் வேண்டுகோளின்படி ஹிரண்யவர்மனை அழைத்துக் கொண்டு போவதற்கேவந்தேன் என்று சொல்ல உடனே ஹிரண்யவர்மன் சிற்சபேசருக்கும் முனிவர்களுக்கும் செய்யும் வழிபாட்டையேயன்றிப் பிரிதொன்றையும் விரும்பேன் என்று சொல்ல வியாக்ரபாதமுனிவர் உன் கருத்து இதுவாயின் நீ உன் தேசஞ்சென்று ராஜகிரீடத்தையும் இரத்தினம் பொன்முதலிய திரவியங்களையும் சதுரங்கசேனைகளையும் மந்திரி மார்களையுங் கொண்டு சீக்கிரம் வருவாயாக வரும்பொழுது அந்தர் வேதியில் போயிருக்கின்ற திரிஸஹஸ்ர முனிவர்களையும் அழைத்துக்

கொண்டுவாஎன்று பணித்தருளினர். ஹிரண்யவர்மன் சிற்சபேசரிடமும் முனிவர்களிடமும விடைபெற்று தன்னுடைய தேசஞ்சென்று சிலநாள் அங்கிருந்து திரவியங்களோடும் சேனைகளோடும் புறப்பட்டு அந்தர் வேதியிலிருந்து திரிஸகஸ்ர முனிவர்களையும் தேர்களின்மேலேற்றிக்கொண்டு அழைத்து தில்லைவனம் வந்து வியாக்ரபாதமுனிவருக்கு எண்ணிக்காட்ட மூவாயிரர் என்னுந்தொகையிலே ஒருவரை அங்கே காணாது ஹிரண்யவர்மா திகைத்து நிற்க எல்லாருங்கேட்கும்படி நடேசபெருமான் இவ்வந்தணர்களெல்லாரும் நம்மை ஒப்பர்கள் நாம் இவர்களை ஒப்போம் நாம் இவர்களுள் ஒருவர் என்றருளிச்செய்தார். அது கேட்ட எல்லார்களும் நடுநடுங்கி சிற்சபேசரை வணங்கி அச்சபையைச்சூழ இருந்தார்கள். கனகசபைக்குக் கிழக்குத் திக்கிலே கொற்றவன்குடி என ஒருநகரஞ் செய்வித்துக்கொண்டு அங்கே இருந்தார் வியாக்ரபாத முனிவர் ஹிரண்யவன்மனை விவாகஞ்செய்வித்து முடிசூட்டிப் புலிக்கொடி கொடுத்துச் சோழராஜாவாக்கி தம்பிமார்களை கௌடதேசத்தை ஆளும்படி உத்திரவு செய்தனுப்பினர். ஹிரண்யவன்மனர் வியாக்பாத முனிவருடைய அனுஜ்ஞைபடி சிற்சபேசருக்குப் பொன்னம்பலமும் ஸ்ரீ மூலஸ்தானேசுவருக்கு திருக்கோயிலும் திருமாளிகைகளும் திருமதில்களும் திருக்கோபுரங்களும் திருவீதியிலே தில்லைவாழந்தணர்களுக்கு திருமாளிகைகளும கட்டுவித்து ஆலயத்திலே பூஜைதிருவிழா முதலியன செய்தற்பொருட்டு வேத விதிப்படி பதஞ்சலி முனிவரைக்கொண்டு பத்ததி செய்வித்து அந்த வைதிகவிதிப்படி பூஜைதிருவிழா முதலியன எல்லாவற்றைச் சிரத்தையுடன் செய்விப்பித்து நாள்தோறுஞ் சிவகங்கையிலே ஸ்நாநஞ்செய்து நடேசபெருமானை தரிசித்து முனிவர்களுக்குப் பணிவிடைசெய்து சிற் சபேசருடைய பரிபூர்ண கிருபைக்குப் பாத்திரமானர் இச்சரித்திரத்தின் விரிவை சிதம்பர மகாத்மியத்திலும் ஹேமசபா மாகாத்மியத்திலும் காண்கமஹாஜ்ஞானியான வசிஷ்டகுல குருவினுடைய சிஷ்யனான ஹிரண்யவர்மன் காசி முதலான பல புண்யக்ஷேத்ரங்கள் சென்று கடைசியில் சிதம்பரம் வந்து முக்தியடைந்தபடியால் பூமியில் எல்லா க்ஷேத்திரங்களுள்ளும் இச்சிதம்பரம் மிகச்சிறந்ததென்னும் ஸாரம் இச்சரித்திரத்தால் வெளியாகிறது (28)

श्रीमान् कर्मपरायणो मुनिवरः शिष्यान्वितो जैमिनिः
भक्त्या यत्रच पादपङ्कजमसावभ्यर्च्य मुक्त्याप्तये ।
स्तुत्वा किं च तुरीयपादनिगमैः स्तोत्रैर्भवन्तं प्रभो
लेभे मुक्तिफलं त्वदंघ्रिकमलं भक्त्या नतोहं भजे ॥२९॥

கர்மநிஷ்டரும்பூர்வ மீமாம்ஸா சாஸ்திராபிவர்த்தகருமான ஜைமினி மஹர்ஷியானவர் சிதம்பரம்வந்து எந்த உம்முடைய சரணகமலத்தை பூஜித்து நாலாவது பாதத்தில் வேதவாக்யத்தோடுகூடிய திவ்ய ஸ்தோத்திரங்களால்ஸ்துதிசெய்து முக்திபலமடைந்தாரோ அந்தத் திவ்ய சரணத்தை பக்தியினால் நமஸ்கரித்து முக்திபலத்தின் பொருட்டு எப்பொழுதும் தியானஞ்செய்கிறேன். இச்சரித்திரம் சிதம்பரமகாத்மியத்திலும் புண்டரீகபுர மாகாத்மியத்திலும் ஸ்பஷ்டமாயிருக்கிறது. உதாரணமாக வேதபாதஸ்தவத்தில் ஒரு ஸ்தோத்ரத்தில் எழுதுகிறோம்.

एषएव वरोऽस्माकं नृत्यन्तं त्वां सभापते ।
लोकयन्तमुमां कान्तां पश्येम शारदश्शतम् ॥

ஓ சபாநாயகரே உமாதேவியைப் பார்த்துக்கொண்டு நிருத்தம் செய்யும் உம்மையே நூறு சம்வத்ஸரகாலம் பார்த்திருக்கவேணும் இதுவே எங்களுடைய பிரார்த்தனே குழந்தைகளின் ஆரோக்யத்துக்காகத் தாய் மருந்துண்ணுவதுபோல் லோகமாதாவான பார்வதியும் பிராணிகளின் க்ஷேமத்தைக்கருதி சதா நிருத்த தர்சனஞ் செய்கின்றாள். இவ்வாறு ரசவத்துக்களான 136ஸ்தோத்திரங்கள் பலவிருத்தங்களில் இருக்கின்றன. (29)

श्रीमानप्पयदीक्षितो बुधमणिः स्तुत्वार्थ वेत्तासुधीः
यत्पादांबुजचिन्तनैकशरणः संप्राप्य तिल्लाटवीम् ।
ध्यायन् यच्चरणं शताधिकमहाग्रन्थप्रणेता महान्
मुक्तिं प्राप सुदुर्लभां मुहुरहं वन्दे तमेव प्रभुम् ॥३०॥

சகல சாஸ்திர பாரங்கதரான அப்பய்ய தீக்ஷிதரென்கிற பக்தச்ரேஷ்டர் எந்த உம்முடைய திவ்யசரணத்தை தியானஞ்செய்து கொண்டு குஞ்சிதாங்கிரிஸ்தவ முதலான அனேகஸ்தோத்ரங்களைச் செய்து சிதம்பரம்வந்து உம்முடையசரணத்யானத்தால் நூத்தி நான்கு கிரந்தாத்ரங்களைச்செய்து மிகவும் துர்லபமான முக்தியை அடைந்தாரோ அந்த உம்மையே நமஸ்கரிக்கின்றேன் (30)

(தொடரும்) ராஜா சோமசேகரதீக்ஷிதர்,

# சிறுவர்களுக்கான சிறுகதைக்கொத்து

## வேதவியாஸர்.

1. இவர் வஸிஷ்டவம்சத்தில்பிறந்தவர், பாராசரது பிள்ளை. இவர் தாய் மத்ஸகந்தி. பாராசர மஹாமுநி லோகோபகாரமான ஓர் குழந்தையைப் பெறவேண்டுமென ஆசைக்கொண்டார். யமுநா நதியில் ஓடம் ஓட்டும் மத்ஸகந்தியைக்கண்டார். தன்னை மணக்கும்படி கேட்டார். அவள் மீன்நாற்றமுள்ளவள். தாழ்ந்த ஜாதியில் பிறந்தவள்நான், மஹர்ஷியான தாங்கள் எப்படி என்னை மணப்பது என்றாள். அவளது பூர்வசரித்திரம் அவருக்குத்தெரியும் அதாவது—

2. உபரிசான் என்ற ஓர் அரசனிருந்தான். அவன் மஹா தபஸ்வி. வீர்யவான். இந்திரன் அவனது ஸாமர்த்தியத்தைக் கண்டு ஸந்தோஷித்தான், அவருக்கு ஓர் விமானத்தைக் கொடுத்தான். அவ்வரசன் வேட்டையாட காட்டுக்குப்போனான். அச்சமயத்தில் அவன் மனைவிருதுகாலம் முடிந்துவிடும்போலிருந்தது. ருதுஸ்நாநம் செய்த நாலாவது நாளிலிருந்து பதினாறு நாட்கள் ருதுகாலமாகும். அத்தினங்களில் நிஷித்த காலந்தவிர மற்ற காலத்தில் ஆண்பெண் கூடவேண்டியது என சாஸ்திரம்.

3. ஆதலால் அரசன் தனது சக்தியை ஓர் கழுகின் மூலமாக அனுப்பினான். அதை மாம்ஸம் என்று நினைத்து மற்றோர் கழுகு சண்டையிட்டது. இதனிடையில் அச்சக்தி யமுனையில் விழுந்தது. அதை ஓர் மத்ஸம் புஜித்தது. அம்மத்ஸமே அத்ரிகை என்ற ஓர் தேவகன்யை ஓர் ரிஷி ஜலத்தில் நின்று அனுஷ்டானம் செய்தார். இவள் ஜலத்தில் முழுகி அவர்காலைப்பிடித்திழுத்தாள். கீழேவிழுந்தார் அவர். உடனே நீ மீனாகு என சபித்தார். காலில்விழுந்து மன்னிப்புகேட்டாள், ஓர் பெண்ணைப் பெற்றவுடன் சாபம் நீங்குமென்றார். பெரியோருக்கு அபசாரம் செய்யலாமா?

4. அத்ரிகா என்னும் மத்ஸரூபமான தேவகன்னியினிடம் உபரிசாவஸு என்ற அரசன் சக்தியால் பிறந்தவள் மத்ஸகந்தி. அவளை பித்ருதேவர்கள் பாராசருக்குவிவாஹம்செய்துவைத்தனர். உடனே பகவான் நாராயணன் அம்சமாக வ்யாஸர் பிறந்தார். இது ஞானசக்தி அவதாரம். அவர் கருத்தரூபமுடையவர்.

செவந்த ஜடையுடையவர். நீண்டசரீரமும் பலாசதண்டமும் மான்தோலும் உள்ளவர். பிறந்தவுடன் ஸகலகலாஞ்ஞானமுள்ள வர். ஒன்றுக இருந்த வேதத்தை ருக்யஜுஸ்ஸாம அதர்வா என்ற நான்காகப் பிரித்தார், இதனுல்தான் இவருக்கு வேதவ்யா ஸர் எனப் பெயர்வந்தது.

5. யாகம் என்பது தேவர்களுக்குச்செய்யும் விருந்து. விருந்துக்கு வருபவர்களை அவரவருக்கு ஏற்றபடி வா என்று அழைப்பது ருக்வேதம். வந்தவர்களுக்கு எப்படி விருந்திடுவது யார் இட்டார் என்னபலனைப்பெற்றுர். என்று கூறுவது யஜுர் வேதம். விருந்தாளிகாதுக்கு அழகாகப்பாடுவது ஸாமவேதம். சத்ருக்களைக்கொல்லும்வழி. ஆசைப்படும் பொருளை அடையும் வழி. இதைபோதிப்பது, அதர்வவேதம். இந்த நாலும் ஒன்றுக கலந்திருந்தது. இவர் அதைப்பிறித்து நாலுசிஷ்யர்களைக்கொண்டு ப்ரஸித்தப்படுத்தினர். ஆதலால் தான் ச்ராவணத்தில் அவருக் கும்பூஜைசெய்கிறோம்.

6. வேதாந்த விஷயத்தை ஸந்தேஹமில்லாமல் நாம் அறிய ப்ரம்மஸூத்ரங்களை இயற்றினர். ஆதலால்தான் வ்யாஸபூஜையை ஸன்யாஸிகளும் செய்கிறார்கள். பெண்களும் சூத்ரர்களும்கூட படித்துக்கேட்டு நன்மைபெற பதினெட்டு புராணங்களையும் எழு தினர். எல்லாவேத தர்மங்களையும் கதைமூலமாகச்சொல்ல, மஹாபாரதத்தை எழுதினர். இதை ஐந்தாம் வேதம் என்பர்.

7. தகப்பனர் எண்ணியபடி லோகோபகாரம் செய்தார் இவர். எல்லோரும் ஸுகமடையவேண்டும் என்பது இவர் எண்ணம். வேதத்தைப்பிறித்துக் கர்மமார்க்கத்தைக் காட்டினர் வேதாந்த ஸூத்ரங்களை எழுதி ஞானத்தை உபதேசித்தார். புரா ணங்களை எழுதி தர்மத்தை விளக்கினர். இவருடையமார்க்கத்தை எல்லோரும் அறியவேண்டும். ஸுகம்பெறவேண்டும். அதற் காக தர்மம் நிறைந்த நீதிகளை எளியநடையில் வெளியிடவேண் டும் என்பது ஸ்ரீ குருமூர்த்தியின் கட்டளை. ப்ரதிவாரமும் வ்யா ஸர் எழுதிய புராணங்களிலிருந்து சிறுவர்க்கும் பெண்களுக்கும் உபயோகமான கதை வெளிவரும்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.

## ஸத்காலக்ஷேபமும் ஆஸ்திகப்ரசாரமும்.

லோகோத்தாரணம் பொருட்டு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பகவத்பாதாள் அவர்கள் விச்வரூப யாத்திரையாய் சுமார் 13 வருஷகாலமாய் ஆங்காங்கு விஜயம்செய்து ஆஸ்திகர்களுக்கு ஞானத்தை மேன்மேலும் உபதேசம் செய்துகொண்டும் தரிசனத்தைக் கொடுத்துக்கொண்டும் வருவது யாவரும் அறிந்த விஷயம்தற்சமயம் ஸ்ரீமஹாஸன்னிதானத்தின் ஆக்ஞையின்பிரகாரம் இவ்விடம்வந்தபிர்மஸ்ரீ கதிரிவெங்கட்டராமசர்மா அவர்களால் ஸ்ரீமஹா ஸன்னிதானம் இவ்விடம் விஜயம் செய்வதாய் யாவத்தராளுக்கும் தெரியவந்தது தத்காரணபூதமாய் மகா-௱-௱-ஸ்ரீ ரங்கஸாமிய்யர் கிரஹத்தில் ஸ்ரீமத் சங்கரவிஜயத்தை புரட்டாசி ௴ 2௳ (18-9-31) வெள்ளிக்கிழமை முதல் 21௳ (7-10-31) புதன்கிழமைவரையில் தினம் ராத்திரி 8 மணிமுதல் 10மணிவரையில் பாமரர்களுக்கும் மனதில் அவகாசம்ஆகும்படி பிர்மஸ்ரீ கதிரி வெங்கட்டராமசர்மா அவர்கள் தமிழ்பாஷையில் உபன்யாஸம் செய்தார்.

ஷெயார் உபன்யாஸம்செய்த ஒரு வாக்சாதுர்யத்தை வித்வான்களால் வர்ணிக்க வேண்டியதேயொழிய என்னால்வர்ணித்து எழுதத் தெரியவில்லை. ஷெ உபன்யாஸத்தை சிரவணம்செய்த ஜனங்கள் யாவரும் ஆசார்யாளுடைய இவ்விடம் விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் தவிர இதன் மத்தியில் புரட்டாசி ௴ 18௳ (4-10-31) ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் 6-30 முதல் 9மணிவரையில் ஸகிந்தராபாத் கொத்த எல்லையாகுடி, என்னும் பரமேச்வரன் கோவிலில்ஸகிந்தராபாத்தில் வசிக்கும் மகா-௱-௱-ஸ்ரீ ஜயராவையர் நடராஜசர்மா அவர்களின் தூண்டுதல், துண்டுப்ரசுரங்களின்மூலம், சங்கரவிஜயத்தை ஷெ கதிரி பிர்மஸ்ரீ வெங்கட்டராமசர்மா அவர்கள் வாக்குமூலம் 2மணிநேரத்தில் அதி சாதுர்யமாய் தமிழ்பாஷையில் உபன்யாஸம் செய்து, தற்காலம் காமகோடிபீடத்தில் விளங்காநிற்கும் ஸ்ரீமஹா ஸன்னிதானத்தின் ஒரு மஹிமையையும் இவ்விடம் விஜயம் செய்யப் போவதையும் எடுத்துச் சொன்னார். ஸகிந்தராபாத்தில் உள்ள திராவிடாள் யாவரும் ஸன்னிதானத்தின் வரவை ஆவ

லுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். தவிர ஸிகிந்தரா பாத்தில் ஸ்ரீ வைதீக தர்மபோதினி என்னும் ஆந்த்ரர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்துவருகிறது ஷெ ஸபா ஸெகிரிடரிகள் பிர்ம ஸ்ரீ சிவுகலு அப்பையாசாஸ்திரி,, ஸ்ரீ நாகம் கிருஷ்ணராவ்,, ஸ்ரீ வங்கமல்லி நீலகண்டம், முதலானவர்கள் தூண்டுதல் தூண்டுப்ரசாரம் மூலம் கன்னிகாபரமேச்வரி ஆலயத்தில் ராயப்ரோலு பிர்மஸ்ரீ வெங்கட்டராஜஸோமயாஜுலு (ப்ரொபஸர் நைஸாம் காலேஜ்) அவர்களை ப்ரஸிடெண்டாக நியமித்து (9-10-31) வெள்ளிக்கிழமை ஸாயங்காலம் 6½மணிமுதல் 9மணிவரையில் சங்கர விஜயத்தை தெலுங்குபாஷையில் பிர்மஸ்ரீ கதிரி வெங்கட்டராம சர்மா அவர்களால் உபன்யாஸம் நடந்தது. பிறகு ஸிகிந்தரா பாத்தில் இருக்கும் வித்வான்பிர்மஸ்ரீ நரஸிம்ம சாஸ்திரிகள் அவர்கள் உபந்யாஸம் செய்பவருடைய ஒரு கீர்த்தியையும் ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தின் விஜயத்தையும் எடுத்துச் சொன்னார் பிறகு ஆசார்யாளுடையபிம்பத்திற்கு கற்பூர ஆரத்திஎடுத்து யாவருக்கும் வியாஸாக்ஷதைக்கொடுத்து ஸபை கலைந்தது இதனால் இவ்விடம் இருக்கும் ஜனங்கள் யாவரும் ஆசார்யாளுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல் நம் பரமாசார்யாளும் இவ்விடம் விஜயம்செய்து ஜனங்களின் மனோபீஷ்டத்தை பூர்த்திசெய்துவைப்பார்கள்என்று நாம்நம்பிக்கொண்டிருப்பதோடு ஆசார்யாள் பாதகமலத்தை ஸதாதியானம் செய்துகொண்டு இருக்கிறோம்.

வி. எஸ் வெங்கட்டராம சாஸ்திரி.
நாராயணகுடா, ஹைதராபாத்.

---

# வாரவிருத்தாந்தம்.

ஸத்ஸங்கம். சென்னை ஹிந்துதியாலஜிகல் ஹைஸ்கூல் என்பது 40 ஆண்டுகளுக்குமுன் பாண்டியா என்ற ஓர் ஆஸ்திகரால் மத விருத்தியின் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது ஆங்கில கலாசாலை ஆகும். பிரதி தினம் மதவகுப்பை நடத்துவதுடன் ஷெ கலாசாலைத் தலைவரும் ப்ரதி சுக்ரவாரத்திலும் மற்ற ஹிந்துப்பண்டிகை தினங்களிலும் விசேஷ உபன்யாஸத்தைப் பல பண்டிதர்கள்மூலம்

நடத்திவருகிறார். அன்றியும் ஸத்ஸங்கம் என்றஸபையைத்துவக்கி ஸ்ரீமத் ராமாயணம் பாரதம் பாகவதம் திவ்யப்ரபந்தம் முதலிய உபன்யாஸங்களை நடத்தி பஜனைகோஷ்டியும் ஆரம்பித்து மாணவர்களுக்கு பக்தியை ஊட்டிவருகிறார். ஸ்ரீராமகிருஷ்ண ஸ்கூலிலும் இதேபோல் நடந்துவருகிறது. 10௳ ஓர் தக்க பண்டிதரைக் கொண்டு ஸ்ரீராமனது குணகணம் உபன்யஸிக்கப்பட்டது. ஏனைய கலாசாலையாரும் இதைப் பின்பற்றின் மாணவர் ஆஸ்திகத்தைப் பெறுவார்.

சிறந்த தர்மம். 11௳ கொச்சிமஹாராஜா தன் 73.வது ஜன்ம தினத்தன்று எண்ணிறந்த ப்ராஹ்மண ஸமாராதனையும் வித்வத் ஸம்மானமும், ஆலயங்களில் அபிஷேகார்ச்சனையும் செய்து வைத்தார். பகவான் தனக்கு எல்லாவற்றையும் விட வேதோக்த தர்மத்தைக் காப்பதால் ப்ராம்மணர்களிடத்தில் அதிக அன்பு உண்டு என்கிறார். அத்தகையோரை ஆராதிப்பது பகவானது மனதிற்கிசைந்த தர்மமாகும்.

ஸத்வித்யை. நவராத்திரி பூஜையை அவரவர் யோக்யதைக்கும் பரிபாகத்திற்கும் ஏற்றபடி ஆஸ்திகர் நடத்தினர். விஜயதசமியும் சென்றது. பலர் தம மக்களுக்கு அக்ஷராப்யாஸம் செய்திருப்பர் அக்ஷரமான பொருளை அடைவதற்கேற்ற வித்யையே ஸத்வித்யை எனப்படும். மற்றவை உதர வித்யையாகும் காரணமின்றி ப்ராஹ்மணன் அத்யயநம் செய்யவேண்டும் என க்ருஹ்ய ஸூத்ரக்காரர் கூறுகின்றனர். மூன்று தலைமுறை அத்யயநம் செய்யாவிடில் அந்தவம்சம் சூத்ரஜாதியைச் சாரந்ததாகும் எனஸ்மிருதிகள் கூறுகின்றன. இதைப்ரத்யக்ஷமாகக்காண்கிறோம் ஆதலால் ப்ராம்மணராகப் பிறந்தவர் ருத்ரம்சமகம்புருஷஸூக்தம் உபநிஷத் இவைகளையாவது கற்கவேண்டும். பரமாசார்யாள் உபதேசத்தால்வயதான உத்யோகஸ்தர்கள் கீழமாம்பலத்தில் ஓர் வேதவகுப்பை ப்ரதிதினம் காலை 4.மணிமுதல்நடத்திவருகின்றனர். ஏனைய நகரவாஸிகள் விஜயதசமிக்குப் பிறகாவது இதை ஆரம்பிப்பார் என நம்புகிறோம்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா